**செப்டம்பர் – 27**

# TNPSC துளிகள்

- ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம் (UPSC) ஆனது அரியானாவின் குருகிராமில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட தேர்வு மையங்களில், தேர்வுகளின் போது தேர்வர்களைப் பரிசோதிப்பதற்காக செயற்கை நுண்ணறிவினால் இயக்கப்படுகின்ற முக அடையாள அங்கீகார முறையை வெற்றிகரமாகப் பரிசோதித்தது.
- உத்தரக்காண்ட் மாநில முதல்வர் ஹால்ட்வானியில் இந்திய வாள்வீச்சு சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டு, இந்தியாவில் நடத்தப்பட்ட முதல் சர்வதேச வாள்வீச்சுப் போட்டியை தொடங்கி வைத்தார்.
- முன்னாள் தலைமை நீதிபதி D.Y. சந்திரசூட், அன்றாட இந்திய வாழ்க்கையை வடிவமைப்பதில் அரசியலமைப்பு விழுமியங்களின் திறன் குறித்து ஆராயும் "Why the Constitution Matters" என்ற புத்தகத்தினை எழுதியுள்ளார்.
- நெருக்கமான இருதரப்பு உறவுகளை வளர்ப்பதிலும், இந்தியா-ஐக்கியப் பேரரசு தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தினை (FTA) அடைவதிலும் பங்காற்றியதற்காகப் பிரிட்டிஷ் பிரதமர் கெய்ர் ஸ்டார்மருக்கு 'Living Bridge' என்ற விருது வழங்கப்பட்டுள்ளது.

# தேசியச் செய்திகள்

## அரசியல் கட்சிகளைப் பட்டியலிலிருந்து நீக்குதல்

| SI No. | State/UT | No. of RUPPs | SI No. | State/UT | No. of RUPPs |
|---|---|---|---|---|---|
| 1 | Andaman & Nicobar Island | 1 | 16 | Madhya Pradesh | 23 |
| 2 | Andhra Pradesh | 17 | 17 | Maharashtra | 44 |
| 3 | Assam | 3 | 18 | Manipur | 2 |
| 4 | Bihar | 15 | 19 | Meghalaya | 3 |
| 5 | Chandigarh | 1 | 20 | Mizoram | 2 |
| 6 | Chhattisgarh | 7 | 21 | Nagaland | 2 |
| 7 | Delhi | 40 | 22 | Odisha | 7 |
| 8 | Goa | 4 | 23 | Punjab | 21 |
| 9 | Gujarat | 10 | 24 | Rajasthan | 17 |
| 10 | Haryana | 17 | 25 | Tamil Nadu | 42 |
| 11 | Himachal Pradesh | 2 | 26 | Telangana | 9 |
| 12 | Jammu & Kashmir | 12 | 27 | Tripura | 1 |
| 13 | Jharkhand | 7 | 28 | Uttar Pradesh | 121 |
| 14 | Karnataka | 10 | 29 | Uttarakhand | 11 |
| 15 | Kerala | 11 | 30 | West Bengal | 12 |
| | Total | 474 | | | |

- இந்திய தேர்தல் ஆணையம் (ECI) ஆனது, கடந்த ஆறு ஆண்டுகளில் தேர்தலில் போட்டி இடாத 474 பதிவு செய்யப்பட்ட அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சிகளை (RUPPs) பட்டியலிலிருந்து நீக்கியுள்ளது.
- இந்த நடவடிக்கையானது நடைபெற்று வரும் தேர்தல் முறை மாற்றத்தின் ஒரு பகுதியாகும் என்பதோடு இது கடந்த இரண்டு மாதங்களில் பட்டியலில் இருந்து நீக்கப் பட்ட மொத்தக் கட்சிகளின் எண்ணிக்கையை 808 ஆக உயர்த்தியுள்ளது.
- முதல் கட்டத்தில், 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 09 ஆம் தேதியன்று 334 RUPP கட்சிகள்

பதிவேட்டில் இருந்து நீக்கப்பட்டன.

- ❖ இந்த இரண்டாம் கட்டத்திற்குப் பிறகு, 1951 மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 29Aவது பிரிவின் கீழ் 2,046 RUPP கட்சிகளின் பதிவுகள் தேர்தல் ஆணையத்தில் தக்க வைக்கப் பட்டுள்ளன.
- ❖ 2021–22, 2022–23 மற்றும் 2023–24 ஆகிய ஆண்டுகளுக்கான வருடாந்திரத் தணிக்கை செய்யப் பட்ட கணக்குகளை சமர்ப்பிக்காததற்காகவும், தேர்தல் செலவு அறிக்கைகளை தாக்கல் செய்யத் தவறியதற்காகவும் மேலும் 359 RUPP கட்சிகளை ECI நீக்க உள்ளது.

# சர்வதேசச் செய்திகள்

## மாலி, புர்கினா பாசோ மற்றும் நைஜர் - ICC

- ❖ மேற்கு ஆப்பிரிக்காவில் உள்ள மூன்று நாடுகளான மாலி, புர்கினா பாசோ மற்றும் நைஜர் ஆகியவை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் (ICC) இருந்து வெளியேறுவதாக அறிவித்துள்ளன.
- ❖ சமீபத்திய ஆண்டுகளில் நடைபெற்ற ஆட்சிக் கவிழ்ப்புகளுக்குப் பிறகு இந்த 3 நாடுகளும் இராணுவ அரசாங்கங்களால் நிர்வகிக்கப் படுகின்றன.
- ❖ ஐ.நா. பொதுச் செயலகத்தில், இந்த முடிவு சமர்ப்பிக்கப்பட்ட ஓராண்டுக்குப் பிறகு சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தில் இருந்து அவற்றின் விலகல் நடைமுறைக்கு வருகிறது.




## பக்ராம் விமானப் படைத் தள பிரச்சினை

- ❖ ஆப்கானிஸ்தானில் உள்ள பக்ராம் விமானப் படைத் தளத்தை மீண்டும் கைப்பற்றுவதற்கான அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்பின் முயற்சியை தாலிபான் அரசாங்கம் உறுதியாக நிராகரித்தது.
- ❖ ஆப்கானிஸ்தானின் இறையாண்மைக்கு எதிராக அமெரிக்க பலத்தைப்

பயன்படுத்துவதைத் தடை செய்யும் தோஹா ஒப்பந்தத்தை தாலிபான் செய்தித் தொடர்பாளர் மேற்கோள் காட்டினார்.

- நான்கு ஆண்டுகளுக்கு முன்பு முறையற்ற இராணுவ வெளியேற்றத்தைத் தொடர்ந்து அமெரிக்கா பக்ராம் விமானப் படைத் தளத்தை தாலிபான்களின் வசம் விட்டது.




## சர்வதேசக் காவல்துறை ஆசியக் குழு




- 25வது ஆசியப் பிராந்திய மாநாட்டின் போது சர்வதேசக் காவல் துறையின் (இன்டர்போல்) ஆசியக் குழுவிற்கு இந்தியா தேர்ந்தெடுக்கப்பட்டது.
- சிங்கப்பூரில் நடைபெற்ற பல கட்ட வாக்களிப்பு செயல்முறையைத் தொடர்ந்து இந்தத் தேர்தல் நடைபெற்றது.

- ஆசியாவில் பிராந்தியக் குற்றம் மற்றும் காவல்துறை ஒத்துழைப்புப் பிரச்சினைகள் குறித்து இக்குழு ஆலோசனை வழங்குகிறது.
- இந்தியாவின் அங்கத்துவமானது, முறை சார் குற்றம், இணையவெளிக் குற்றம், தீவிரவாதம் மற்றும் மனித கடத்தல் ஆகியவற்றை நிவர்த்தி செய்ய உதவும்.

## H-1B நுழைவு இசைவுச் சீட்டு 2025





- அதிபர் டொனால்ட் டிரம்ப் H-1B நுழைவு இசைவுச் சீட்டு விண்ணப்பக் கட்டணத்தை ஒரு நிறுவனத்திற்கு 100,000 டாலராக உயர்த்தியுள்ளார்.
- டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் போன்ற இந்தியத் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் வரலாற்று ரீதியாக அதிக H-1B நுழைவு இசைவுச் சீட்டுகளைப் பெற்றன.
- சமீபத்தில், அமேசான், மைக்ரோசாப்ட் மற்றும் கூகிள் போன்ற அமெரிக்க தொழில் நுட்ப நிறுவனங்களானது நுழைவு இசைவுச் சீட்டு நிதி ஆதரவில் (ஸ்பான்சர்ஷிப்பில்) முன்னிலை வகித்தன.
- 2024 ஆம் ஆண்டில், அமெரிக்காவில் அங்கீகரிக்கப்பட்ட H-1B நுழைவு இசைவுச் சீட்டு வைத்திருப்பவர்களில் 71 சதவீதம் பேர் இந்தியர்கள் ஆவர்.
- இந்தக் கட்டண உயர்வு ஆனது வெளிநாட்டுப் பணியமர்த்தலைக் குறைப்பதையும், அதிக திறமையான, அதிக ஊதியம் பெறும் தொழிலாளர்களுக்கு முன்னுரிமை அளிப்பதையும் நோக்கமாகக் கொண்டது.

## One-in-one-out திட்டம் – பிரான்சு

- ஜூலை மாதம் முதல் ஐக்கியப் பேரரசு-பிரான்சு One-in-one-out என்ற குடியேற்ற ஒப்பந்தத்தின் கீழ் நான்கு ஆண்கள் மட்டுமே பிரான்சு நாட்டிற்குத் திருப்பி அனுப்பப் பட்டுள்ளனர்.
- இந்த ஒப்பந்தமானது, ஐக்கியப் பேரரசில் ஒருவருக்குப் புகலிடம் வழங்கப் பட்டதற்காக பிரான்சு நாட்டிற்குத் திரும்பிய ஒரு புலம்பெயர்ந்தவரைக் குடும்ப உறவுகளுடன் இடம் மாற்றிக் கொள்கிறது.
- இந்த ஒப்பந்தம் பிரான்சிலிருந்து ஐக்கியப் பேரரசிற்கு ஆங்கில (இங்கிலீஷ்) கால்வாயின் வழியே அமைந்த ஆபத்தான சிறியப் படகு கடப்புப் பகுதிகளைக்


குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இந்த ஒப்பந்தம் இருந்த போதிலும், 2025 ஆம் ஆண்டில் 32,000க்கும் மேற்பட்டோர் இந்த கால்வாயைக் கடந்து சென்றுள்ளனர்.
- ஆரம்பக் கட்ட இலக்காக வாரத்திற்கு 50 புலம்பெயர்ந்தோரை திருப்பி அனுப்புவதாக இருந்தது ஆனால் இதுவரை நான்கு பேர் மட்டுமே திருப்பி அனுப்பப் பட்டுள்ளனர்.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## முப்பரிமாண முறையில் அச்சிடும் மையம்





- அக்னிகுல் காஸ்மோஸ் நிறுவனம், சென்னையில் உள்ள இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் ஆராய்ச்சிப் பூங்காவில் விண்வெளிக்கான இந்தியாவின் முதல் தனியார் பெரிய வடிவிலான முப்பரிமாண அச்சிடும் மையத்தினைத் தொடங்கி உள்ளது.
- இந்த மையமானது, 1 மீட்டர் உயரம் வரையிலான விண்வெளிக் கூறுகளை முப்பரிமாண முறையில் அச்சிடும் வசதியை செயல்படுத்துகிறது என்பதோடு இது ஏவு வாகன அமைப்புகளின் வேகமான மற்றும் மலிவான மேம்பாட்டினையும் அனுமதிக்கிறது.
- உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட அதிகப்படியான அச்சு சாயக் கூறுகளை நீக்கும் (டி-

பவுடர்) இயந்திரம் ஆனது, உயர்தர மேற்பரப்பு வடிவமாக்கம் மற்றும் அச்சிடப்பட்ட கூறுகளுக்கான விண்வெளி தர நிலைகளை உறுதி செய்கிறது.

- புதிய வடிவமைப்புகள் முந்தைய மாதிரிகளை விட ஏழு மடங்கு உந்துதலை வழங்குகின்றன என்பதால், இந்த மையமானது முப்பரிமாண முறையில் அச்சிடப்பட்ட ஒற்றைத் துண்டு ஏவு வாகன இயந்திரங்களின் உள்ளக உற்பத்தியை ஆதரிக்கிறது.

## செயற்கை நுண்ணறிவினால் வடிவமைக்கப்பட்ட வைரசின் மரபணுக் கூறு




- ஸ்டான்போர்டு பல்கலைக்கழகம் மற்றும் ஆர்க் இன்ஸ்டிடியூட் ஆகியவற்றின் ஆராய்ச்சியாளர்கள் முழுமையாக செயற்கை நுண்ணறிவினால் வடிவமைக்கப்பட்ட செயல்பாட்டு வடிவிலான உலகின் முதல் வைரஸ் மரபணுக் கூறினை உருவாக்கினர்.
- செயற்கை நுண்ணறிவினால் வடிவமைக்கப்பட்ட வைரஸ், எஸ்கெரிச்சியா கோலி பாக்டீரியாவைப் பாதிக்கும் ΦX174 எனப்படும் ஒரு பாக்டீரியோபேஜ் ஆகும்.
- Evo என பெயரிடப்பட்ட செயற்கை நுண்ணறிவு மாதிரிக்கு, ஆயிரக்கணக்கான மாதிரி மரபணுக்களை உருவாக்க இரண்டு மில்லியன் வைரஸ் மரபணுக்களில் பயிற்சி அளிக்கப் பட்டது.
- செயற்கை நுண்ணறிவினால் வடிவமைக்கப்பட்ட 302 மரபணுக்களில், 16 மரபணுக்கள் பாக்டீரியாக்களை வெற்றிகரமாகப் பாதித்து ஆய்வக சோதனைகளில் அதைப் பிரதி எடுத்தன.
- செயற்கை நுண்ணறிவினால் வடிவமைக்கப்பட்ட வைரஸ்கள் இயற்கையில் ஒரு போதும் காணப்படாத நூற்றுக் கணக்கான பிறழ்வுகளைக் கொண்டிருந்தன.


# சுற்றுச்சூழல் செய்திகள்

## விலாங்கு மீன் இனங்கள்

- அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் புதிய வகையிலான துடுப்பு இல்லாத விலாங்கு மீன் இனங்களைக் கண்டறிந்துள்ளனர்.
- இந்த இனமானது ஆப்டெரிக்டஸ் இனத்தைச் சேர்ந்தது.
- கன்னியாகுமரி மாவட்டத்தின் கலாச்சார, மொழியியல், வரலாற்று மற்றும் புவியியல்

முக்கியத்துவத்தை கௌரவிக்கும் வகையில் இதற்கு ஆப்டெரிக்டஸ் கன்னியகுமாரி என்று பெயரிடப்பட்டுள்ளது.

- இது NBFGR குழுவினால் இந்தியக் கடற்கரையில் கண்டறியப்பட்ட 16வது இனமாகும்.




## தொலைதூரப் பெருங்கடல் பரப்பு பாதுகாப்பு ஒப்பந்தம் 2025




- தொலைதூரப் பெருங்கடல் பரப்பு பாதுகாப்பு ஒப்பந்தம் ஆனது 2026 ஆம் ஆண்டு ஜனவரி 17 ஆம் தேதியன்று சர்வதேச சட்டமாக மாற உள்ளது.
- மொராக்கோ இந்த ஒப்பந்தத்தினை அங்கீகரித்த 60வது நாடாக மாறியது.
- இந்த ஒப்பந்தமானது அதிகாரப்பூர்வமாகத் தேசிய அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்ட பகுதிகளின் கடல் சார் உயிரியல் பன்முகத்தன்மையைப் பாதுகாத்தல் மற்றும் நிலையான பயன்பாடு குறித்த ஒப்பந்தம் என்று அழைக்கப்படுகிறது.
- இது உலக நாடுகளின் 200 கடல் மைல்கள் வரையிலான பிரத்தியேகப் பொருளாதார மண்டலங்களுக்கு அப்பால் அமைந்துள்ள தொலைதூரப் பெருங்கடல் பரப்புகளை உள்ளடக்கியது.

- இந்த ஒப்பந்தமானது சர்வதேச பெருங்கடலில் கடல் சார் பாதுகாக்கப்பட்ட பகுதிகளை உருவாக்க அனுமதிக்கிறது.
- சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடுகள், கடல்சார் மரபணு வளப் பகிர்வு மற்றும் திறன் மேம்பாட்டிற்கான விதிகளை இது அமைக்கிறது.
- இந்த ஒப்பந்தத்தை அங்கீகரிக்கும் நாடுகள் மட்டுமே இப்பங்குதாரர்கள் மாநாட்டில் வாக்களிக்க முடியும்.
- தற்போது வரை, 63 நாடுகள் இந்த ஒப்பந்தத்தை அங்கீகரித்துள்ளன என்பதோடு இது குறைந்தபட்சத் தேவையான 60 நாடுகள் என்ற எண்ணிக்கையை விட அதிகமாகும்.
- இந்த ஒப்பந்தமானது 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முடிவு செய்யப்பட்டு 2023 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் ஐக்கிய நாடுகளின் உறுப்பினர் நாடுகளால் ஏற்றுக் கொள்ளப் பட்டது.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## UN80 அறிக்கை




- "Shifting Paradigms: United to Deliver" அறிக்கையானது ஐக்கிய நாடுகள் சபையின் (UN) 80வது ஆண்டு நிறைவைக் குறிக்கிறது.
- 3ம் செயல்பாட்டுத் தொடர் அறிக்கையானது ஐ.நா. செயல்திறன் மற்றும் தாக்கத்தை மேம்படுத்துவதற்காக கட்டமைப்பு மாற்றங்கள் மற்றும் திட்ட மறு சீரமைப்புகளை முன்மொழிகிறது.
- முக்கியச் சீர்திருத்தங்களில் UNDP போன்ற நிறுவனங்களை ஐக்கிய நாடுகளின் திட்ட சேவைகள் அலுவலகத்துடன் (UNOPS) இணைப்பது மற்றும் அமைதி, பாதுகாப்பு, மனிதாபிமானம் மற்றும் மனித உரிமைகள் பணிகளை வலுப்படுத்துவது ஆகியவை அடங்கும்.
- ஒருங்கிணைக்கப்பட்ட வெவ்வேறு மாற்றங்கள் உலகளாவிய, பிராந்திய மற்றும் உலக நாடுகள் மட்டங்களில் ஒருங்கிணைப்பைச் செயலாற்றுவதை நோக்கமாகக் கொண்டு

உள்ளன.

- தொழில்நுட்ப மேம்பாட்டுத் தளம் மற்றும் பகிரப்பட்டச் சேவைகள், செயல்பாடுகளை நவீனமயமாக்கும் மற்றும் செலவுகளைக் குறைக்கும்.
- இந்த அறிக்கையானது ஐ.நா. சாசனத்துடன் இணக்கம், பொறுப்புக் கூறல் மற்றும் மதிப்பிடக் கூடிய மேம்பாடுகளை வலியுறுத்துகிறது.

# மாநிலச் செய்திகள்

## குழந்தைத் திருமண முறையை ஒழித்தல்




- "Healthy Women, Empowered Families" பிரச்சாரத்தின் போது, சத்தீஸ்கரில் உள்ள சூரஜ்பூர் மாவட்ட நிர்வாகமானது 75 கிராமப் பஞ்சாயத்துகளை "குழந்தைத் திருமணம் இல்லாதவையாக" அறிவித்துள்ளது.
- கடந்த இரண்டு ஆண்டுகளில் இந்தப் பஞ்சாயத்துகளில் குழந்தைத் திருமண வழக்குகள் எதுவும் பதிவாகாததை அடுத்து இந்த அந்தஸ்து வழங்கப்பட்டது.
- விழிப்புணர்வுப் பிரச்சாரங்களில் அங்கன்வாடி பணியாளர்கள், பஞ்சாயத்துப் பிரதிநிதிகள், அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் உள்ளூர் சமூகங்கள் பங்கேற்றனர்.
- இந்த முன்னெடுப்பு ஆனது, குழந்தை உரிமைகள், தாமதமான திருமணங்கள் மற்றும் பெண் குழந்தைகளின் கல்வியை ஊக்குவித்தது என்ற நிலையில் இதன் விளைவாக அந்தப் பகுதிகளில் மேம்பட்ட சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து விளைவுகள் பதிவாகச் செய்தன.
- இந்த வெற்றியானது யுனிசெஃப் அமைப்பின் ஆதரவுடன் 2024 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் தொடங்கப்பட்ட மாநிலத்தின் பரந்த அளவிலான "குழந்தைத் திருமணம் இல்லாத சத்தீஸ்கர் பிரச்சாரத்துடன்" ஒன்றி வந்தது.

## தர்பார் மகிளா சமன்வயா குழு

- கொல்கத்தாவில் உள்ள பாலியல் தொழிலாளர்களின் கூட்டமைப்பான தர்பார் மகிளா சமன்வயா குழு (DMSC), 2025 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் அதன் 30 ஆம் ஆண்டு நிறைவினைக் கொண்டாடியது.
- உலக சுகாதார அமைப்பினால் தொடங்கப்பட்ட ஒருமித்தக் கணக்கெடுப்பின்

அடிப்படையில், DMSC ஆனது ஆணுறைகளை விநியோகிப்பதற்காகவும் HIV/AIDS தொற்றுநோயை எதிர்த்துப் போராடுவதற்காகவும் 1992 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.

- சோனகாச்சியில் சுமார் 12,000 பாலியல் தொழிலாளர்கள் வசிக்கின்றனர் என்பதோடு இந்த DMSC சங்கமானது மேற்கு வங்க மாநிலம் முழுவதும் பாலியல் தொழிலாளர்களையும் சேர்த்து 28,000க்கும் மேற்பட்டவர்களை உறுப்பினர்களாகக் கொண்டுள்ளது.
- குடும்ப அட்டைகள், ஆதார் அட்டைகள் மற்றும் வங்கிக் கணக்குகளைப் பெறுவதற்கு எதிர்கொண்ட பாகுபாட்டை எதிர்த்துப் போராடிய இந்தச் சமூகம், நிதி சார் சுதந்திரத்திற்காக USHA கூட்டுறவு அமைப்பை உருவாக்கியுள்ளது.
- பல பாலியல் தொழிலாளர்கள் தங்கள் குடும்பங்களை ஆதரிக்க தானாக முன்வந்து இதில் இணைகிறார்கள் என்கிற நிலையோடு அதே நேரத்தில் DMSC ஆனது 2,000க்கும் மேற்பட்ட கடத்தப் பட்ட பெண்களை ஆலோசனை மற்றும் மறுவாழ்வு மூலம் மீட்டு உள்ளது.




# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## கலைமாமணி விருதுகள் 2021/2023 – தமிழ்நாடு

- நடிகர்கள் சாய் பல்லவி, S.J. சூர்யா, விக்ரம் பிரபு, K. மணிகண்டன், ஜெயா V.C. குக நாதன் மற்றும் M. ஜார்ஜ் மரியன் ஆகியோர் 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான கலைமாமணி விருதுகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.
- இசையமைப்பாளர் அனிருத், பாடலாசிரியர் விவேகா, பின்னணிப் பாடகி ஸ்வேதா மோகன், திரைப்பட இயக்குநர் லிங்குசாமி, கலை இயக்குநர் M. ஜெயக்குமார், நடன இயக்குநர் A. சந்தோஷ் குமார், சண்டை பயிற்சியாளர் (ஸ்டண்ட் மாஸ்டர்) சூப்பர் சுப்பராயன் உள்ளிட்டோர் இந்த விருதினைப் பெற உள்ள பிற நபர்கள் ஆவர்.
- மூத்த பின்னணிப் பாடகர் K.J. யேசுதாஸ் இசைக்கான M.S. சுப்புலட்சுமி விருதுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- இலக்கியத்திற்கான பாரதியார் விருது N. முருகேச பாண்டியனுக்கு வழங்கப்பட உள்ளது.
- நடனத்திற்கான பாலசரஸ்வதி விருது பத்மஸ்ரீ முத்துக்கண்ணம்மாளுக்கு வழங்கப்பட உள்ளது.

❖ சங்கங்கள் பிரிவின் கீழ் சென்னைத் தமிழ் இசை சங்கம் இந்த விருதிற்குத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.


❖ நாடகக் குழு பிரிவின் கீழ் கலைமாமணி M.R. முத்துசாமி நினைவு நாடகக் குழு தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.

❖ இலக்கியம், இசை, நடனம், நாடகம், திரைத் துறை மற்றும் பாரம்பரியக் கலைகள் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் மொத்தம் 90 கலைஞர்கள் இந்த விருதுகளைப் பெறுவார்கள்.




# முக்கிய தினங்கள்

## உலக அல்சைமர் நோய் தினம் 2025 - செப்டம்பர் 21




❖ அல்சைமர் நோய் மற்றும் டிமென்ஷியா (மறதி நோய்) குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்த நாளின் நோக்கமாகும்.


❖ அல்சைமர் அதிகரிக்கும் நினைவாற்றல் இழப்பு, குழப்பம் மற்றும் அறிவாற்றல் வீழ்ச்சியை ஏற்படுத்துகிறது.

❖ செப்டம்பர் மாதம் முழுவதும் சர்வதேச அளவில் அல்சைமர் விழிப்புணர்வு மாதமாக அங்கீகரிக்கப் பட்டுள்ளது.

❖ இந்த நோய் குறித்த திறந்த உரையாடலை ஊக்குவிப்பதற்காக வேண்டி, 2025 ஆம்

ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துருவாக, "Ask About Dementia. Ask About Alzheimer's" என்பது முன்மொழியப்பட்டது.

## உலக காண்டாமிருக தினம் 2025 - செப்டம்பர் 22




- காண்டாமிருக வளங்காப்பு மற்றும் வேட்டையாடுதல் எதிர்ப்பு முயற்சிகள் குறித்து உலகளாவிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்த நாளின் நோக்கமாகும்.
- உலக காண்டாமிருக தினம் ஆனது வனவிலங்கு வளங்காப்பு ஆர்வலர்கள் மற்றும் சர்வதேச அமைப்புகளால் 2011 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- பெரிய ஒரு கொம்பு காண்டாமிருகம், கருப்பு நிற காண்டாமிருகம், வெள்ளை நிற காண்டாமிருகம், ஜாவா காண்டாமிருகம் மற்றும் சுமத்ரா காண்டாமிருகம் ஆகிய ஐந்து வகையான காண்டாமிருகங்கள் உள்ளன.
- பெரிய ஒற்றைக் கொம்பு காண்டாமிருகம் 4,000க்கும் மேற்பட்ட எண்ணிக்கையுடன் முதன்மையாக இந்தியா மற்றும் நேபாளத்தில் காணப்படுகிறது.
- கருப்பு நிற, ஜாவா மற்றும் சுமத்ரா போன்ற காண்டாமிருக இனங்கள் வேட்டையாடுதல் மற்றும் வாழ்விட இழப்பு காரணமாக மிகவும் அருகி வருகின்றன.
- அசாமில் உள்ள காசிரங்கா தேசியப் பூங்கா உலகின் மிக அதிக ஒற்றைக் கொம்பு காண்டாமிருகங்களின் எண்ணிக்கையைக் கொண்டுள்ளது.

## உலக ரோஸ் தினம் 2025 - செப்டம்பர் 22




- இது புற்றுநோய் நோயாளிகளின் நலனுக்கான நாள் என்றும் அழைக்கப்படுகிறது.
- இந்த நாள் புற்றுநோய் நோயாளிகள், அந்த நோயிலிருந்து உயிர் பிழைத்தவர்கள்

மற்றும் அன்பு, நம்பிக்கை மற்றும் இரக்கத்துடன் கவனிக்கும் அந்த நோயாளிகளின் பராமரிப்பாளர்களை கௌரவிக்கிறது.

- இது 1996 ஆம் ஆண்டில் உயிரழந்த கனடாவினைச் சேர்ந்த 12 வயது புற்றுநோய் நோயாளி மெலிண்டா ரோஸின் நினைவைக் குறிக்கிறது.
- புற்றுநோய் தடுப்பு, முன்கூட்டியே கண்டறிதல் மற்றும் நோயாளிகளின் உணர்ச்சித் தேவைகள் பற்றிய விழிப்புணர்வை இந்த நாள் எழுப்புகிறது.

## சர்வதேச சைகை மொழிகள் தினம் 2025 - செப்டம்பர் 23

- காது கேளாதோர் சமூகத்திற்கான அடிப்படை மனித உரிமைகளாக விளங்கும் சைகை மொழிகள் பற்றிய விழிப்புணர்வை இந்த நாள் ஊக்குவிக்கிறது.
- 2017 ஆம் ஆண்டில் ஐ.நா. சபையினால் நிறுவப்பட்ட இத்தினம் 1951 ஆம் ஆண்டில் உலக காது கேளாதோர் கூட்டமைப்பு நிறுவப்பட்டதைக் குறிக்கிறது.
- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "No Human Rights Without Sign Language Rights" என்பது அவர்களின் உட்சேர்ப்பு, கண்ணியம் மற்றும் அணுகல் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.
- சைகை மொழிகள் ஆனது காது கேளாதோர் மற்றும் காது கேளும் திறனில் குறைபாடு உள்ள மக்களுக்குக் கல்வி, பணியிடங்கள் மற்றும் எண்ணிமத் தளங்களில் முழு பங்கேற்பைச் செயல்படுத்துகின்றன.




# இதரச் செய்திகள்

## பாரன் தீவில் எரிமலை வெடிப்பு – அந்தமான் கடல்

- பாரன் தீவில் செயலில் உள்ள இந்தியாவின் ஒரே எரிமலையானது ஒரு வாரத்திற்குள் இரண்டு முறை வெடித்துள்ளது.

- பாரன் தீவில் உள்ள எரிமலையில் முதல் வெடிப்பு 1787 ஆம் ஆண்டில் நிகழ்ந்தது.
- பின்னர் இந்த எரிமலையானது 200 ஆண்டுகளுக்கும் மேலாகச் செயலற்ற நிலையில் இருந்தது என்பதோடு பின்னர் 1991 ஆம் ஆண்டில் மீண்டும் ஒரு பெரிய வெடிப்பு ஏற்பட்டது.
- இந்த எரிமலையின் செயல்பாடு 2005, 2017 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் மீண்டும் பதிவானது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★